Registered as a News Papere    பக்கங்கள் 04    விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம்- 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    வைகாசி 04    ( 17 - 05 - 1992 )    ஞாயிற்றுக்கிழமை    ஓசை: 89

## தேசிய அபிவிருத்தி வங்கி இயக்குநர்சபை ராஜினாமா

தேசிய அபிவிருத்தி வங்கியின் இயக்குநர் சபையைச் சேர்ந்த ஐந்து உறுப்பினர்களும், அதன் தலைவர் பி. மகாதேவாவும் தமது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளார்கள். இவர்கள் கடந்த புதனன்று தமது இராஜினாமாக் கடிதத்தை அரசுக்குச் சமர்ப்பித்தார்கள். மக்கள் மயமாக்கும் திட்டத்தின் கீழ் அரசு தேசிய அபிவிருத்தி வங்கியையும் மக்கள் மயமாக்கவுள்ளது. மக்கள்மயமாக்கும் திட்டத்தின்கீழ் முன்னோடி நடவடிக்கையாக அரசு இந்த வங்கியின் பங்குகளை விற்று வருகிறது என்று இயக்குநர் சபைத்தலைவர் பி. மகாதேவா வங்கி வருடாந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். தேசிய அபிவிருத்தி வங்கி (திருத்தம்) சட்டம் இல; 10, 1992 பங்குகளைவிற்பதற்கு வழிவகைசெய்கிறது. (4ஆம் பக்கம் பார்க்க)

# வடகிழக்கு யுத்தத்தினால் பொருளாதாரம் சீரழிவு

## அரசு எதிர்கொள்ளும் நெருக்கடி

(கொழும்பு)

வடகிழக்கு யுத்தத்தின் எதிர்விளைவாக சிறிலங்காவின் பொருளாதாரம் மிகவும் மோசமான முறையில் சீர்கேடு அடைந்துவருவதாக தெரியவருகிறது. முடிவில்லாமல் தொடரும் யுத்தத்தினால் ஏற்பட்டு வரும் பாரிய இராணுவ செலவினங்கள் ஒருபுறமும், பிரமாண்டமான அகதிகள் பிரச்சினை மறுபுறமாக சிறிலங்காவின் பொருளாதாரத்தை மோசமாக பாதித்துள்ளன.

வடக்கு-கிழக்கில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் யுத்தத்தினால் சிறிலங்காவின் செலவினங்களில் இராணுவச் செலவீடு பெரும் அளவில் உயர்ந்துள்ளது. இதன் காரணமாக தென்னாசியாவில் பாகிஸ்தானுக்கு அடுத்து கூடுதலான இராணுவச் செலவீடு செய்யும் நாடாக சிறிலங்கா மாறியுள்ளது. இராணுவத்தினரின் தொகையில் ஏற்பட்ட அபரிமிதமானஉயர்வும் பெரும் அளவினதான இராணுவத்தளபாடக் கொள்வனவும்இச்செலவினங்களுக்குக் காரணம்எனத் தெரியவருகிறது. இதனால் அபிவிருத்தித் திட்டங்கள் பாதிக்கப்பட்டு பொருளாதாரம் பெரும்நெருக்கடிநிலையை அடைந்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை சிறிலங்காவின் ஏற்றுமதியில் முக்கிய பங்கு வகிக்கும் தேயிலை, றப்பர் உற்பத்தியும், நெற்செய்கையும் இவ் வருடத்தின் முதல் காலாண்டுப் பகுதியில் ஏற்பட்ட கடும்வரட்சியால் பாதிப்படைந்ததைத் தொடர்ந்து மேலும் பொருளாதாரம் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

அத்தோடு வடக்கு-கிழக்கு யுத்தத்தினால் தொடர்ந்து ஏற்பட்டுவரும் அகதிகள் பிரச்சினை பெரும் பொருளாதார நெருக்கடியை அரசிற்கு உருவாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கையில் சுமார் ஏழரை இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தற்பொழுது அகதிகளாயுள்ளனர். இந்த அகதிகளுக்கு நிவாரணம் வழங்க மாதாந்தம் கோடிக்கணக்கான ரூபா செல

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அரச அதிபர் கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரச அதிபர் நேற்று காலை பலாலி சென்று அங்கிருந்து விமானம் மூலம் கொழும்பு புறப்பட்டுள்ளார். [பா]

## 5 சிங்களவர்கள் கொலை

[கொழும்பு]

அம்பாறை மாவட்டத்தில் மகாஓயா கிராமத்தில் நேற்று ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து சிங்களவர்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இதனை அமைச்சர் தயாரெத்ன தெரிவித்தார்.

இவர்கள் வெட்டிக் கொலை செய்யப்படவில்லை. சுட்டுக் கொலை செய்யப்பட்டவர்கள் என்று லங்காபுவத் ஊர்ஜிதம் செய்துள்ளது.

# திருமலையில் ராணுவம் அட்டூழியம்

# சித்திரவதை, கொலை, தீவைப்பு

# போதனா வைத்தியசாலையில் கண்நோயாளர் பெரும் அவதி

யாழ். போதனா வைத்தியசாலையில் கண் சிகிச்சை பெறும் நோயாளர் நாளாந்தம் பல சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பல மாதங்களாக கண் சிகிச்சை பெற வரும் நோயாளர்கள் இருபது மணி நேரம் காத்திருந்தே சிகிச்சை பெறவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர்.

மேற்படி வைத்தியசாலையில் முன்னர் இரண்டு கண் சிகிச்சை நிபுணர்கள் கடமையாற்றி வந்தனர். ஆனால் தற்பொழுது கொழும்பு சென்ற ஓர் கண்சிகிச்சை நிபுணர் திரும்பி வராததால் ஒருவர் மட்டுமே கடமையாற்றி வருகின்றார்.

வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே இந்நிபுணர் நோயாளர்களைப் பார்வையிடுவதுடன் புதிய நோயாளர்களைப் பார்வையிடுவதும் கடமை நாட்களில் பதினைந்து என வரையறுக்கப் பட்டிருப்பதுமே இதற்குக் காரணம் எனத் தெரியவருகிறது.

இதனால் பதினைந்து பேருக்குள் தாமும் ஒருவராக வர வேண்டும் என்பதால் முதல் நாள் நண்பகல் ஒரு மணி முதலே இந் நோயாளர்கள் யாழ். போதனா வைத்திய சாலையின் வெளிநோயாளர் நுழைவாயிலுக்கு பின்பாகவுள்ள திறந்த வெளியில்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். வைத்தியசாலையில் ஈக்கள், நுளம்புகளுடன் நோயாளர் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

கட்டாக்காலி நாய்கள், இலையான், நுளம்பு ஆகியவற்றால் இருபத்தி நான்கு மணி நேரமும் யாழ் போதனாவைத்திய சாலை விடுதி நோயாளர் அவதியுறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ். போதனாவைத்திய சாலையின் பெரும்பாலான விடுதிகளில் பகல் முழுவதும் இலையான் தொல்லைகளால் நோயாளர் பெரும் அவஸ்தைக்குள்ளாகின்றனர். நோயின் தாக்கத்தால் வேதனையுற்றிருக்கும் நோயாளர் நிம்மதியாக ஓய்வெடுக்க முடியாது அவர்களது உடல் முழுவதும் இலையான்கள் மாறி மாறி மொய்ப்பதால் பகல் முழுவதும் நோயாளர் இலையான்களுடன் மோத வேண்டியுள்ளது இதே வேளை மாலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# முதலாளித்துவ அரசுகளால் உருவாக்கப்பட்ட யுத்தம்

## ஜே. வி. பி. தலைவர் சோமவன்ச

[லண்டன்]

வடக்கு கிழக்கில் நடைபெறும் யுத்தம் முதலாளித்துவ அரசுகளால் ஏற்படுத்தப் பட்டதாகும். இதனால் பாதிக்கப்படுகிறவர்கள் அப்பாவிப் பொதுமக்கள்தான்.

இவ்வாறு ஜனதா விமுக்திப் பெரமுனையின் தற்போதய தலைவர் சோமவன்ச அமரசிங்க லண்டனில் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

எங்களைப் பொறுத்த ... சினைக்கு அரசியல் தீர்வுதான் தேவை. வடக்கு கிழக்கில் இராணுவ முகாம்களைத் தொடர்ந்து வைத்திருப்பதால் எவ்வித பயனுமில்லை என்றார் அவர்.

## கிராம சேவகர் பரீட்சை நடைபெறுவதில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

கிராம சேவகர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சையை திட்டமிட்டபடி நடாத்துவதில் தாமதம் ...

நாடு முழுவதும் நடாத்தப்பட இருக்கும் இப் போட்டிப் பரீட்சைக்கான ஏற்பாடுகள் எதுவும் இதுவரை பூர்த்தியாக்கப்படவில்லை. இதற்கான அனுமதி அட்டைகள் பரீட்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரின் அடாவடித்தனங்கள் அதிகரித்துள்ளன.

திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள கிராமங்களை சுற்றிவளைக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் அப்பாவித் தமிழ்மக்களைக் கொலைசெய்வதுடன் கொள்ளை, வீடெரிப்பு, கைது என்பவற்றில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த சில தினங்களில் மட்டும் மூன்று பேர் சிறிலங்கா இராணுவத்தினரால் வெட்டிக்கொல்லப்பட்டுள்ளதுடன், இரண்டு வீடுகளும், ஒரு கடையும் எரிக்கப்பட்டன.

மீன் பிடிக்க அனுமதிப்பத்திரம் பெறச்சென்ற ஏழு மீனவர் சம்பூர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 12 ஆம் திகதி மீன்பிடி அனுமதிப்பத்திரம் பெறவென இராணுவமுகாம் சென்றிருந்த கடற்சேனை மூதாரைச்சேர்ந்த நாகராஜா தவப்புதல்வன்(வயது 17), ஐலேசப்பிள்ளை கமலநாதன் (வயது 22), சாமித்தம்பி பரமேஸ்வரன்(வயது 23), செல்லையா ஜீவராசா (வயது 19), செல்லையா தவராஜா (வயது 22, திருமணமானவர்), மாட்டின் மதிராஜா (வயது 19), மாட்டின் ஜேசுராஜா (வயது 22) ஆகிய இளைஞர்களே இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

இதேவேளை கடந்த வியாழன் அன்று ஈச்சிலம்பத்தை இராணுவத்தினர் வெருகல் முட்டுச்சேனை, கல்வெட்டுவான்ஆகியஇடங்களைச்சுற்றிவளைத்து வீடுவீடாகத் தேடுதல் நடாத்தினர்.

இத்தேடுதலின்போதுமூன்று தமிழ்ப்பொதுமக்களைக் கத்தியால் வெட்டிக்கொன்றதுடன் வீடுகளில் உள்ள உபகரணங்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கணேஸ் சிவாகரன் (வயது 21, வெருகல், மூதூர்), தங்கராசா கிருபன் (வயது 47, மூதூர்), கணபதிப்பிள்ளை (வயது 45, சம்பூர், மூதூர்) ஆகியோரே இராணுவத்தினரால் வெட்டிக்கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

இவர்களில்கணபதிப்பிள்ளை என்பவர் முட்டுச்சேனை பாடசாலை அதிபராவார். மூன்னர் ஈரோஸ் முழுநேர ஆதரவாளரான இவர் தற்போது விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளராவார். இவருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

இதேதினம் மூதூர் கடற்கரைச்சேனை கிராமத்தைச் சுற்றிவளைத்த சம்பூர், கட்டைபறிச்சான் இராணுவத்தினர் ஒரு கடையை எரித்ததுடன் வரதன், இன்பன் ஆகியோரின் இரண்டு வீடுகளும் எரிக்கப்பட்டன.

# வாகரையில் ராணுவம் குவிப்பு போக்கு வரத்துகள் துண்டிப்பு

மட்டக்களப்புமாவட்டத்தில் உள்ள வாகரையில் இராணுவ நடவடிக்கை மீண்டும் முடுக்கி விடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

வாகரைக்கான பஸ் சேவைகள் யாவும் துண்டிக்கப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகளைத் தேடும் நடவடிக்கையில் இராணுவம் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் இடையிடையே விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையே மோதல்கள் இடம் பெறுவதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வாகரையில் உணவுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் இதனால் மக்கள் அங்கிருந்து கால் நடையாக வாழைச்சேனை நோக்கி இடம்பெயர்ந்துள்ளனர் குண்டு வீச்சு விமானங்களும் அப்பகுதியை நோக்கிச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளைமட்டக்களப்பில் கடந்த சில தினங்களாக பாதுகாப்பு பன்மடங்கு பலப்படுத்தப்பட்டுள்ளது. சோதனை நிலையங்களில் கூடுதலான பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு பிரயாணிகளும் கடும் சோதனைக்குட்படுத்தப் பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு கச்சேரி மாநகரசபை அலுவலகம் ஆகியவற்றுக்குசெல்லும்பொதுமக்களும் ஊழியர்களும் பலத்த சோதனைக்குட்படுத்தப்படுவதுடன் வாகனம், துவிச்சக்கரவண்டிகள் என்பனவற்றையும் அப்பகுதிக்கு கொண்டு செல்ல தடை விதித்துள்ளனர்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆறு தமிழர்கள் நேற்று முன்தினம் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## செட்டிக்குளம் பகுதியில் இராணுவத்தின் முயற்சி புலிகளால் முறியடிப்பு

[வவுனியா]

செட்டிக்குளம்பகுதியில் சிறிலங்காஇராணுவத்தினரின் பரவலான முன்னேற்றம் புலிகளால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. கடந்த புதன்கிழமை கிறிஸ்தவகுளம் பகுதியை நோக்கி முன்னேறி வந்த இராணுவத்தினர் மேலும்பரவலாக முன்னேற முயன்றனர்.

முன்னேற முயன்ற இராணுவத்தினரை புலிகள் முன்னேற விடாது தடுத்து நிறுத்தியுள்ளனர். இதனையடுத்து செட்டிகுளம் இராணுவ முகாமிலிருந்து அயற்பகுதிகளைநோக்கி கடும் எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

கடந்த செவ்வாய்க்கிழமை செட்டிக்குளம் பகுதியில் 6 காவலரண்கள் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டதை தொடர்ந்துஅப்பகுதியில்தமது நிலையைப் பலப்படுத்தும் முயற்சியில் சிறிலங்கா இராணுவத்தினர்ஈடுபட்டுள்ளனர்.

இதற்கென அப் பகுதியில் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

## வானில்சிக்குண்டு மரணம்

(சாவகச்சேரி)

வானில் பிரயாணம் செய்த குடும்பப் பெண்ணொருவர் தவறுதலாக கீழே வீழ்ந்ததால் அந்த வானின் சில்லால் நெரிக்கப்பட்டுத் தலைசிதறி மரணமாகியுள்ளார். இச் சம்பவம் நேற்றுக் காலை 7 மணியளவில் கச்சாய் வீதியில் நிகழ்ந்துள்ளது. பெரியமாவடி உப்புக்கேணியைச் சேர்ந்த

[4 ஆம் பக்கம் பார்க்க]

டியில் தெரிவித்தார்.

எங்களைப் பொறுத்தவரையில் இன, மத, மொழி என்ற வேறுபாடின்றி யாவரும் இந் நாட்டு மக்கள் அனைத்து மக்களுக்கும் உரிமைகள் வழங்கப்படும்போது பிரச்சினைகளுக்கு இடமில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

வடக்கு கிழக்குப் பிரச

படி நடாத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இம் மாதம் 25 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட மேற்படி பரீட்சை இத் திகதியில் நடாத்தப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் தென்படவில்லை என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைக்கப்படவில்லை. இந்த நிலையில் இப் பரீட்சை தொடர்பான திகதி மிக விரைவில் வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [க]

## விபத்து

[சாவகச்சேரி]

மோட்டார் சைக்கிள்-சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர். இச் சம்பவம் நேற்றிரவு புத்தூர்ச் சந்தியில் நிகழ்ந்துள்ளது. நுணாவிலைச் சேர்ந்த எஸ்.கண்ணன் உமாரமணி ஆகியோரே இவ்வாறு காயமடைந்தவர்களாவர். (35)

## இந்தியாவிலிருந்து திரும்பிய அகதிகளின் சைக்கிள்களை பறிக்கும் இராணுவம்

(வவுனியா)

தமிழகத்திலிருந்து கொண்டுவரப்பட்ட சைக்கிள்களை அகதி மக்கள் வவுனியாவிற்கு வடக்கே கொண்டுசெல்வதற்குச் சிறிலங்கா இராணுவம் தடை விதித்துள்ளது.

வவுனியா அகதிமுகாமில் இருந்து வெளியேறிவரும் தமிழக அகதி மக்கள் அங்கிருந்து கொண்டுவந்த சைக்கிள்களை இராணுவத்தினர் பறித்தெடுக்கின்றனர்.

இப்போது கொண்டுசெல்ல முடியாது. காலம் வரும்போது அறிவிக்கின்றோம். பின்னர் எம்மிடம் பெற்றுச் செல்லுங்கள் என்று இராணுவத்தால் கூறப்பட்டுள்ளது.

இராணுவத்தால் இவ்வாறு நூற்றுக்கணக்கான சைக்கிள்கள் அபகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி)

## மாணவர்கள் போராட்டம் தீவிரமடையும் சாத்தியம்

கொழும்புப் பல்கலைக்கழகம் நாளை திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டபோதிலும் மாணவர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிடவில்லை. பதினொரு மாணவர்கள் தொடர்ந்து உண்ணாவிரதமிருந்துவருகின்றனர்.

இவர்களுக்கு ஆதரவாகத் தென்னிலங்கையில் உள்ள ஏனைய பல்கலைக்கழக மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரிக்கப்போவதாக அறிவித்துள்ளார்கள்.

## மாகாண இணைப்பிற்கு சோனகர் சங்கம் எதிர்ப்பு

நாடு தொடர்ந்தும் ஒன்பது மாகாணங்களாக இருப்பதையேஆதரிக்கின்றோம் அதே வேளை வடக்கு கிழக்கு மாகாணங்களின் எல்லைகளை மீள வரைவதற்கும் நாம்எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என அகில இலங்கை சோனகசங்கம் தெரிவித்திருக்கிறது.

இச் சங்கம் தேசிய இனப் பிரச்சினை தொடர்பாகவிடுத்துள்ள அறிக்கையில் இன அல்லது மத அடிப்படையில் அதிகாரப் பகிர்வைச் செய்வதற்கான எந்த முயற்சியையும் எதிர்ப்பதாகவும் தமிழர் தாயகக்கோட்பாட்டையும் எதிர்க்கின்றனர் என்றும் அவ் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

## சப். இன்ஸ்பெக்டர் பொலிசால் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

கடும் வாக்குவாதம் ஒன்று ஏற்பட்டதையடுத்து றிசர்வ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவரை சக பொலிசார் ஒருவர் சுட்டுக்கொன்றுள்ளார். இச்சம்பவம் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

காவல் நிலையத்தில் இல்லாமல் போன பொலிசார் ஒருவரிடம் அதற்கான விளக்கத்தைக் கோரியபோது சப்இன்ஸ்பெக்டர் செல்லபெரும சுட்டுக் கொல்லப்பட்டார். சுட்டுக்கொன்ற பொலிசார் தற்கொலை செய்ய எடுத்த முயற்சி ஏனைய பொலிசாரால் முறியடிக்கப்பட்டது. இச் சம்பவம் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் இடம் பெற்றுள்ளது.

## வரி விளம்பரம்

### ஜோதிடம்

எண்கணிதஜோதிடம், கைரேகை சாஸ்திரம், ஜெனன ஜாதகங்கள், குறிப்புக்கள், திருமணப் பொருத்தங்கள் கணிக்க பார்க்க நாடுங்கள்:- (பரம்பரை சோதிடர்) சின்னத்தம்பி தம்பு அரசடி, நல்லூர் தெற்கு செவ்வாய் மாற்றமும் விற்பனைக்குண்டு. (2577)

## திங்கள் தபால் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வந்தடைந்த குமாரி கப்பலில் எடுத்து வரப் பட்ட 270 தபாற் பொதிகளும் நேற்று முன்தினம் யாழ். தபாலகம் வந்து சேர்ந்தன. இவைதரம் பிரிக்கப்பட்டு திங்கட்கிழமை விநியோகிக்கப் படும் என தெரிவிக்கப்படுகின்றது. (பா)

## இறால் வளர்ப்புக்கு இரு இடங்கள் தெரிவு

(கொழும்புத்துறை)

வடமராட்சி கிழக்கில் இறால் வளப்புக்கென இரு இடங்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளன எனத்தெரிவிக்கப் பட்டுள்ளது.

மருதங்கேணிச் சந்திக்கு அருகாமையிலுள்ள கடற் பகுதி (கடல் நீரேரி) குடத்தனை, பொற்பதிக்கடற்பகுதி ஆகிய இடங்களே தெரிவு செய்யப்பட்ட இடங்கள் ஆகும்.

இவ்விரு கடற்பகுதிகளிலும் இறால் வளர்ப்பு நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப் பட உள்ளதாகத் தெரிய வருகின்றது. (24)

## அடுத்தமாத நடுப்பகுதியில் நிர்வாகசேவை பரீட்சை

இலங்கை நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சை அடுத்த மாத நடுப்பகுதியில் கொழும்பில் நடைபெறுமென கொழும்பிலிருந்து திரும்பிய கச்சேரி ஊழியர் தெரிவித்துள்ளார்.

இப் இப்பரீட்சைக்கு யாழ் மாவட்டத்திலிருந்து சேவை மூப்பின் அடிப்படையிலான பல அதிகாரிகளும் விண்ணப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிர்வாக சேவைப்பரீட்சை முதலில் மே இரண்டிலும், பின்னர் மே ஒன்பதிலும் நடைபெறுமென அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)

## மட்டு. மீனவர்களுக்கு விசேட அடையாள அட்டை

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மீனவர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளது. கடலுக்கு மீன்பிடிக்க செல்வதற்கென விசேட அனுமதி அட்டைகளும், அடையாள அட்டைகளும் வழங்கப்படவிருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் விரிவாக்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

## காணவில்லை

### கந்தையா நாகம்மா

கொக்குவிலைச் சேர்ந்த கந்தையா நாகம்மா என்பவரைக் கடந்த செவ்வாயன்று காணவில்லை. இவர் ஐம்பது வயது மதிக்கத்தக்கவரும் சித்த சுவாதீனமும் உடையவர். நீளச் சட்டை அணிந்துள்ளார். கண்டவர் உடனடியாகக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அறியத் தரவும்.

க. செல்வபாலன்
சிவன் வீதி, பரவக்குளம்,
திருநெல்வேலி.

(2576)

## ஸ்ரீதர் திரையரங்கில்

# ஒன்பது பொதுத் தேர்தல்களில் தொடர்ந்தும் தோல்வி கண்டோம்

\- அனுரா

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி மீண்டும் பதவிக்கு வந்தால் அது ''மரவள்ளிக்கிழங்கு உண்ணும்'' பழைய காலத்திற்கு மக்களைக் கொண்டு சென்றுவிடும் எனப் பலரும் நினைக்கின்றனர். இச்சந்தேகம் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். சுதந்திரக் கட்சியின் பொருளாதாரக் கொள்கை தற்போதைய பொருளாதார அமைப்புக்கு இசைவானதாகவே கொண்டு செல்லப்படும்.

இவ்வாறு குருநாகல் நகர மண்டபத்தில் கடந்த ஞாயிறு இடம்பெற்ற கட்சிக் கருத்தரங்கொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அனுரா பண்டார நாயக்கா தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், எமது கட்சி அமைப்பாளர்கள் மிகவும் பலமாகவே உள்ளனர். ஆனால் துரதிஷ்டவசமாக எந்தத் தேர்தலிலும் வாக்குகள் எண்ணப்படும் போது ஐ. தே. க கட்சியே அநேகமாக அதிக வாக்குகளைப் பெற்று விடுகிறது. இந்நிலை நிறுத்தப்பட வேண்டும்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி நீண்ட காலத்துக்கு ''மைத்துனியர்'' வழிபாட்டை உருவாக்குவதன் மூலம் வாக்குகளைப் பெற்றுக் கொண்டிருக்க முடியாது. இக்கட்சியால் மக்களின் நம்பிக்கையை வெற்றி கொள்ள முடியாத நிலை இருந்தது. மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ற விதமாக இயங்க முடியாதிருந்ததால் 1977 ஆம் ஆண்டின் பின்னர் கட்சி ஒன்பது தேர்தல்களில் தோல்வி கண்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரே ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொதுவான வேட்பாளராக போட்டியிடுவார். சிறிமாவோ பண்டார நாயக்காதலைமைப் பதவியிலிருந்து விலகிக் கொண்டால் அப்பதவிக்கு தான் போட்டியிடப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும் எமது கட்சியின் தலைவர் எனது தாய்தான் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. ஆனால் இந்த வெற்றிடம் ஒரு தேர்தல் மூலமாகவே நிரப்பப்பட வேண்டும் எனக் கூறுகிறேன்.

வேறுயாரும் இத்தேர்தலில் போட்டியிடலாம் ஆனால் இத் தேர்தல் ரகசிய வாக்கெடுப்பு மூலமே நடைபெற வேண்டும். மேலும் கட்சியின் அரசியல் குழுவிற்கான தேர்தலில் (வரும் ஜூன் அல்லது ஜூலையில்) நான் போட்டியிட மாட்டேன் எனவும் தெரிவித்தார்.

## ஐவரை விடுவிக்கக் கோரி ஆட்கொணர்வுமனு தாக்கல்

(கொழும்பு)

படையினரால் கைதாகி இருந்து ... தோடாமல் இருக்கும் மூவ..., தடுப்புக் காவல்உத்தரவில் களுத்துறை சிறைச்சாலையில் இருக்கும் இருவர் ஆகியோரை நீதிமன்றில் ஆஜர்செய்து விடுதலை செய்யுமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மனுக்களை விசாரணைக்கேற்ற நீதியரசர் பிரதிவாதிகள் பதில் தாக்கல் செய்ய ஜூன் 3ஆம் திகதி வரை அவகாசம் கொடுத்துள்ளார்.

வவுனியாவைச் சேர்ந்த நடராஜா ஞானேஸ்வரன், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவபாலன் ரமேஷ், கோமாரியைச் சேர்ந்த கந்தையா செல்வரட்ணம், மட்டுநகர் ஜெயந்தி புரத்தைச் சேர்ந்த பொன்னையா பேரின்பம், கல்முனை பாண்டிருப்பைச் சேர்ந்த சிவதாயகன் மனோரஞ்சன் ஆகியோரே இந்த ஐவருமாவர்.

## ஓட்டப் போட்டி

நவாலியில் மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டியும் (OPENRACE), மரதன் ஓட்டப் போட்டியும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

போட்டிகளை நடாத்துவதற்கு நவாலி வடக்கு சன சமூக நிலையத்தினர் ஒழுங்கு செய்துள்ளனர்.

அடுத்த மாத நடுப்பகுதியில் நடைபெறவுள்ள இப்போட்டிக்கு வடமாகாணத்திலுள்ள எவரும் பங்குபற்றலாம். அத்துடன் வயது வேறுபாடு இன்றி மேற்கொள்ளப்படுமென நிலையத் தலைவர் க. கோணேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

## பெறுபேறுகள் வெளியாகியுள்ளன

யாழ். பல்கலைக்கழக இறுதி வருட சிறப்புக் கலை மாணவர்களுக்கான பெறுபேறுகளும், வர்த்தக - முகாமைத்துவ மாணவர்களுக்கான பெறுபேறுகளும் வெளியாகியுள்ளன.

முகாமைத்துவ மாணவர்கள் நான்கு பேர் முதலாம்தரத்திலும் 10வீதமான மாணவர்கள் இரண்டாவதுஉயர்தரத்திலும் சித்தியடைந்துள்ளதாக பரீட்சைக்கிளை அறிவித்துள்ளது. (05)

## சுண்டுக்குளியில் தமிழ்த்தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நேற்று முன்தினம் தமிழ்த்தின விழா சிறப்புற நடைபெற்றது. பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில்

## ஊவாப் பகுதி

## தேயிலைத் தோட்டங்களில் ஊழியர் வேலை நிறுத்தம்

(பண்டாரவளை)


பண்டாரவளை பகுதியில் ஊவாஹைலன்ஸ், ஓஹியோ, போகவை ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் மேற்கொண்டு வரும் வேலை நிறுத்த போராட்டம் முடிவின்றி தொடர்ந்துகொண்டிருக்கின்றன என்று தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தோட்டப்பகுதியில்இனந் தெரியாத சிங்கள காடையர்களால் தொழிலாளர் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து இத்தொழிலாளர்கள் கடந்த 12ஆம் திகதியில் இருந்து

இவ்விடயம் தொடர்பான இறுதி முடிவை எடுக்க பேச்சுவார்த்தை நடைபெறாததினால்கடந்த 12 ஆம் திகதியில் இருந்து தொடர்ந்து வேலை நிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே போல போகவை ஓஹியோ தோட்டத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்களும் முடிவின்றி தொடர்ந்து கொண்டிருக்கின்றது இங்கும் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படாமையே காரணம் எனதொழிற்

## 6 - ம் ஆண்டு நினைவஞ்சலி



| அவதாரம் | அமரத்துவம் |
| --- | --- |
| 16 | 17 |
| - | - |
| 09 | 05 |
| - | - |
| 1967 | 1986 |

### வீரவேங்கை சூட்டி

(செல்வன் கனகசபை கிருபாகரன்)

மன்னு மட்ஷ்ய வைகாசி மதிவளரு மட்டமியில்
சொன்ன கிருபாகரப்போர் சேரிளையான் - இந்நகரில்
போர் மறவனாகிப் பொருதிப் பகைமாய்த்து
வீரசொர்க்கம் சேர்ந்தான் விளைந்து

மசார்பளை
பளை.

\- குடும்பத்தினர்
2548.

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



மாதா மடியில்
27-9-1971
மண்ணின் மடியில்
17-5-1989

### வீரவேங்கை இன்சூர்

நடராசா ஜெயகரன்

இன்சூர் என்றவுடன் இன்முகத்தைக் காட்டிடுவாய்
இன்னல்கள் பல வந்தபோதும் இன்முகத்தைக் காட்டிடுவாய்
துன்பங்கள் பலவந்தும் உன்குடும்பத்தை துரத்திடவும் துணிந்து நின்றாய்
இன்னுயிரைத் துச்சமென்று இணைத்து நின்றாய் விடுதலைப் புலியாய்
காட்டில் நீ இறந்ததனால் தமிழ் ஈழநாள்
ஏட்டில் பதித்து விட்டாய் உன்பெயரை - எம் நெஞ்சில்
பாட்டாய் பதிந்து விட்டாய் படித்திடுவோம் உன் புகழை

(2572)

\-கோண்டாவில் மக்கள்

## நினைவு கூருகின்றோம்---

1992-05-17

1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய
★ பத்மன் (ம பரமேஸ்வரன் - நற்பிட்டிமுனை, கல்

ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கு

சனி, ஞாயிறு தினங்களில்

மாலை 4.00, 6.00 மணி

காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றது.

Freedom Forces

(இந்தோனேசிய விடுதலைப் படை)

(சி/4347)



6-ம் ஆண்டு நினைவு அஞ்சலி

| தோற்றம் | | வீர சுவர்க்கம் |
|---|---|---|
| 08 | | 17 |
| - | | - |
| 05 | | 05 |
| - | | - |
| 1967 | | 1986 |



வீரவேங்கை அலெக்ஸ்

( அரிகரன் நாகலிங்கம் )

ஆண்டு ஆறு சென்ற தடா
மாண்டாயோ? எனில் இல்லை
நீண்ட புகழ் தான் நிறுவி
பூண்டாயே வெட்சி மகிழ்ந்து
வண்ணத் தமிழ் ஈழம்
யாண்டும் விரும்பினையே
மீண்டும் வீரம் விளைக்க
ஈண்டும் வாராயோ நீ?

புங்குடுதீவு.

அப்பா, அம்மா, தங்கை,
உற்றார், உறவினர்.

(இ/4385)


கல்லூரியில் நேற்று முன்தினம் தமிழ்த்தின விழா சிறப்புற நடைபெற்றது. பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. சமகால நிகழ்வுகளைச் சித்தரிக்கும் வகையில் அமைந்திருந்த இக்கலை நிகழ்ச்சிகளை நூற்றுக்கணக்கான மாணவர்களும் ஏனையோரும் கண்டு களித்தனர்.

## இடைநிறுத்தம்

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளரான சேகு இஸ்ஸதீன் அப்பதவியிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். அவர் அக்கட்சியின் உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

## சுங்க அதிகாரிகள் இருவர் பதவி நீக்கம்

சிங்கப்பூரிலிருந்து 50 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தை கடத்த முற்பட்ட நபர் ஒருவரிடம் இருந்து இரண்டு இலட்சம் ரூபா இலஞ்சம் வாங்கினார் என்றகுற்றச்சாட்டின் பேரில் இரண்டு சுங்க அதிகாரிகள் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் பதவியில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

கைக்கடிகார உதிரிப்பாகம் என்றுகூறி இறக்குமதி செய்யப்பட்ட மேற்படி தங்கம் தற்போது சுங்கப்பணிப்பாளரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்குஉதவிய குற்றச்சாட்டின் பேரில் தபால் ஊழியர் ஒருவரும் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

ஹல்ஸ்டோப்பிலுள்ள சுங்க பொதி அறையில் இருந்து மேற்படி பார்சலை சோதனையின்றி வெளியே எடுத்துச் செல்வதற்கு மேற்படி லஞ்சம் கோரப்பட்டதாக சுங்கப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

தெரியாத சிங்கள காடையர்களால் தொழிலாளர் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து இத்தொழிலாளர்கள் கடந்த 12ஆம் திகதியில் இருந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதுயாவரும் அறிந்ததே.

றது இங்கும் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படாமையே காரணம் எனதொழிற்சங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## மாத்தளையில்தமிழர்களின் விண்ணப்பம் புறக்கணிப்பு

மாத்தளை பழைய கச்சேரிக் கட்டடத்தில் இயங்கிவரும் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியில் சுய தொழில் வேலை வாய்ப்புக்கான கடனுதவி பெற்றுக்கொள்ள விண்ணப்பித்துள்ள தமிழ் மக்களின் விண்ணப்பப்படிவங்கள் அங்கு கடமையாற்றிவரும் ஒரு சில உத்தியோகத்தர்களால் காலதாமதப்படுத்தப்பட்டு வருவதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

சிங்கள மக்களுக்கு விண்ணப்பித்த ஒரு மாதகாலப் பகுதிக்குள் கடனுதவி வழங்கப்பட்டுவிடுவதாகவும் ஏனைய தமிழ் மக்களின் விண்ணப்பங்கள் நான்கு ஐந்து மாதங்கள் இழுத்தடிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுறகிது.

இது தொடர்பாக சம்மந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## அறிமுக அரங்கும் கருத்துரையும்

(யாழ்ப்பாணம்)

''மாடும் கயிறுகள் அறுக்கும்'', ''நாங்கள் மனிதர்'' ஆகிய இரு நூல்கள் பற்றிய அறிமுகமும், கருத்துரையும் எதிர்வரும் புதன்கிழமை யாழ். பல்கலைக்கழக செல்வநாயகம் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

பிற்பகல் 4.00 மணியளவில் ஆரம்பமாக இருக்கும் இவ்வைபவத்தை யாழ். பல்கலைக்கழகத் தமிழ்மன்றமும், தேசிய கலை இலக்கியப் பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

திரு. முருகையன் எழுதியஇவ்விருநூல்கள் பற்றிய அறிமுக உரைகளை பேராசிரியர் சண்முகதாஸ், சோ. பத்மநாதன், திருமதி அம்மன்கிளி முருகதாஸ் ஆகியோர் நிகழ்த்துவார்கள்.

## திங்கட்கிழமை வங்கிவிடுமுறை

(யாழ்ப்பாணம்)

நாளை 18 ஆம் திகதி திங்கட்கிழமை வங்கி விடுமுறையாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

## தவறாது சமுகம் தரவும்

கோப்பாய் ஆசிரியகலாசாலையில் பயிற்சி பெறுகின்ற அனைத்து கலாசாலை ஆசிரிய மாணவர்களையும் நாளை (18 5 92) திங்கட்கிழமை காலை (9.00) மணிக்கு தவறாது சமுகந்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.


1992-05-17

1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய

★ பத்மன் (ம. பரமேஸ்வரன் - நற்பிட்டிமுனை, கல்முனை, அம்பாறை)

நற்பிட்டிமுனையில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினரால், கைதுசெய்யப்பட்டு தம்பட்டையில் வைத்து கொலை செய்யப்பட்ட -

★ முரளி (த. முரளீதரன் - நற்பிட்டிமுனை, கல்முனை, அம்பாறை)

1986 ஆம் ஆண்டு ஊர்காவற்றுறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

அலெக்ஸ் / அரி (நாகலிங்கம் அரிகரன் - 11ஆம் வட்டாரம், புங்குடுதீவு)

நிதி (தில்லையம்பலம் சிவசிகாமணி - நயினாதீவு)

1988 இல், காரைதீவுப்பகுதியில் தேசவிரோதசக்திகளினுடனான மோதலின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

இரசாத் (காரைதீவு - 03, அம்பாறை)

மல்லாவியில் வயலில் வேலைசெய்துகொண்டிருந்த போது இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் காயமுற்று, யாழ்-மருத்துவமனையில் பலியான தமிழ் விவசாயி.

1989 ஆம் ஆண்டு யாழ். கொக்குவில் செருக்கன் புலம் பகுதியில் இந்தியப் படையினருடனான மோதலின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

இன்சூர் (நடராசா ஜெயகரன் - இன்சூர்வீதி, கோண்டாவில் வடக்கு)

இதே ஆண்டு இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பெண் - மற்றும், அத்தியாயர் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன்.

புன்னாலைக் கட்டுவனில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட இளம்பெண் உட்பட 2 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் மிதிவெடியில் சிக்கியதில் வீரச்சாவெய்திய -

லெப். ரஞ்சன் (மு. சுபாஸ்கர் - நெடுங்கேணி, மணலாறு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/4426)

**சிந்தனைக்கு**

அது அதிசயம்; ஆனால் உண்மை;
உண்மை என்றுமே விசித்திரமானது;
கற்பனையை விடவும் அற்புதமானது

- பைரன் பிரபு

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 17-05-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 023-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 85

# கனடாவில் உருவாகும் தலைமுறையிடம் தாயகப் பற்றை எதிர்பார்க்க முடியாது

- மாலினி பாலசிங்கம்

கனடாவில் குடியேறியிருக்கும் இலங்கையர்களில் பலரும் முதல் தலைமுறை அகதிகள் ஆவார் தற்போது அங்கேயே பிறந்து-வளர்ந்துவரும் அடுத்த தலை முறையினர் தாய் மண்ணின் மீதோ- சொந்த ஊரின் மீதோ பற்றுக்கொண்டவர்களாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது இவ்வாறு அண்மையில் கனடாவிலிருந்து திரும்பிய மாலினி பாலசிங்கம் 'ஐலண்ட்' இதழில் தெரிவித்துள்ளார் அவர் மேலும் கூறுகையில்;

சிறிலங்காவிலிருந்து இனப் பிரச்சனைகளால் வெளியேற்றப்பட்டவர்களின் மனதில் கசப்பான உணர்வுகளே இழையோடி இருக்கிறது இங்குள்ளவர்கள் தாம் வாழும் இடத்தையே தமது சொந்த ஊர் போலப் பாவிக்கின்றார்கள்.

திடீரென பணம் கைக்கு வருவது தலையில் மேலும் பாரத்தை அதிகரித்துவிடுகின்றது. ஒரு அறையில் ரிவி ஒன்றைச் சுற்றி அடைபட்டுக் கிடக்கின்றார்கள் இந்த வாழ்க்கை முறையைக் கைவிட்டு எல்லோருமாகச் சேர்ந்து தமக்கென ஒரு சமூக வாழ்க்கையைத் தேடிக்கொள்ளலாம் ஆனால் இதில் இவர்களுக்கு விருப்பம் இருப்பதாக இல்லை என்று கத்தோலிக்க மதகுருவான வண பிரான்சிஸ் சேவியர் கூறுகின்றார் இவர் அகதிகள் புனர்வாழ்வுக்கு பெருமளவில் உதவிபுரிகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு காலத்தில் மதிப்புக்குரியதாகக் கருதப்பட்ட சிறிலங்காவின் கடவுச்சீட்டுக்கு தற்போது எந்த ஒரு நாட்டுக்கும் செல்வதற்கான ஒரு 'மந்திரக் கோல்' போல் பயன்படுகிறது. விமான நிலையங்களில் சிறிலங்கா இளைஞர்கள் விரும்பத்தகாத பேர்வழிகளாகக் கணிக்கப்பட்டு வருகின்றார்கள். அத்துடன் குடிவரவு அதிகாரிகளால் தீவிரவிசாரணைக்குஉட்படுத்தப்பட்டும்வருகிறார்கள்.

கனடிய மக்கள் இலங்கைத் தமிழர்கள் மேல் ஆதரவாக இருக்கின்றார்கள் என்ற அபிப்பிராயத்தில் உண்மையில்லாமல் இல்லை. இடம் பெயர்ந்து கனடாவில் பெரியநகரங்களில் குடியேறி வாழும் வெளிநாட்டவர்களில் இலங்கைத்தமிழர் வெளிப்படையாக கண்ணுக்குப் புலப்படக்கூடிய வகையில் வாழ்கிறார்கள்.

சட்ட விரோதமாகக் கனடாவுக்குக் குடியேறுவது இன்றும் தொடர்கிறது. குழுக்களாக விமானங்களில் வந்து இறங்கும் அகதிகள் தமது கடவுச் சீட்டுக்களைக் கழிவறைக்குள் அழித்துவிட்டு அகதி அந்தஸ்து கோருகின்றார்கள். எனினும் இன்று கனடாவில் விஸா பெறுவதென்பது அவ்வளவு சுலபமான விடயமல்ல.

பல இலங்கைத் தமிழர்களுக்கும் கனடாவின் டொறன்டோ நகரம் புனித நகரமான மெக்கா போலவே விளங்குகிறது. இங்கு வருபவர்களில் மோசடிக்காரர், பத்திரிகையாளர், கௌரவமான தொழில் அதிபர்கள், புத்திசாலிகளான புலமைப் பரிசில் பெறும் மாணவர்கள், போலிப் பாஸ்போட், விஸா தயாரித்துப் பணம் உழைப்பவர்கள் என்றெல்லாம் பல தரத்தினரும் அடங்கியுள்ளனர். என அவர்மேலும்விபரித்துள்ளார்.

## படுகொலைகள் மத்தியில் மாணவர் போராட்டம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவாஞ்சிக்குடியில் 2000 க்கு மேற்பட்ட மாணவர்கள் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்ட இருமாணவிகளை விடுவிக்கக்கோரி பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர். இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தைக் கலைக்க சிறிலங்கா பொலிஸார் மேற்கொண்ட தடியடிப் பிரயோகத்தில் மாணவ, மாணவிகள் படுகாயம் அடைந்தனர். அதே வேளை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மாணவர்களில் சுமார் 100 பேர் கைதும் செய்யப்பட்டனர்.

களுவாஞ்சிக்குடியில் மாணவர்கள் இவ் ஆர்ப்பாட்டத்தில் இறங்கியபோது இவ்வாறான சம்பவங்கள் யாவற்றையும் எதிர்பார்த்தே இறங்கியிருப்பர் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. ஏனெனில் கிழக்கு மாகாணம் அந்தளவிற்கு சிறிலங்கா இராணுவத்தினரினதும், முஸ்லிம் ஊர்காவல்படையினரதும் வெறியாட்டத்திற்கும் உள்ளாக்கப்பட்டுள்ளது.

தென்தமிழீழப் பகுதி எப்பொழுதும் ஒரு கொந்தளிப்பு நிலையிலேயே உள்ளது. அங்கு வாழும் தமிழர்கள் வாழ்க்கையில் என்றும் நிச்சயமற்ற தன்மையே நிலவுகின்றது. மாணவர் நிலையும் அதற்கு விதிவிலக்கல்ல. அடிக்கடி சுற்றிவளைப்புக்கு உள்ளாகும் கிராமங்களில் உள்ள மக்கள் பெரும் துன்பங்களையும், அவலங்களையும் அன்றாடம் சந்திக்கின்றனர். சுட்டுக் கொல்லப்படுவதும், சித்திரவதை செய்யப்படுவதும் அன்றாட நிகழ்வாகி விட்டது. கைது செய்யப்பட்டு முகாம்களுக்குக் கொண்டு செல்லப்படுபவர்களின் நிலை பற்றி ஏதுமே அறியமுடியாததாக உள்ளது.

அத்தோடு அரசாங்கத்தின் திட்டமிட்ட குடியேற்றங்களினால் தமிழரின் பூர்வீக கிராமங்கள் அபகரிக்கப்படுகின்றன. தமிழரின் பாரம்பரிய நிலப்பரப்புக்களை கபளீகரம் செய்யும் சிறிலங்கா இராணுவம் அங்கு காணப்படும் தமிழரின் வரலாற்றுச் சின்னங்களையும், பாரம்பரியங்களையும் அழித்து வருகின்றது. இந்து ஆலயங்கள் இடிக்கப்பட்டு வருகின்றன. சிலவற்றில் இராணுவம் நிலை கொண்டுள்ளது. அதேவேளை

## ஆசியநாட்டவர்களால் புதுநோய் கனடாவில் பரவுவதாக அச்சம்

(வான்கூவர்)

மஞ்சள் காமாலை பீ எனும் புதிய நோய் ஒன்று கனடாவில் பரவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இந்நோயை ஆசிய நாடுகளிலிருந்து வருவோரே வட அமெரிக்கா முழுவதும் பரப்புவதாக கனடாவில் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நோய் அனேகமாக மனிதனின் ஈரல் பகுதிகளையே தாக்குவதாகும். இது ஈரல் புற்றுநோய்க்கும் வழிவகுக்கின்றது எனவும் இந்நோய் ஆசியநாடுகளிலேயே பரவலாக காணப்படுகிறது. எனவே இந்நோய் பசுபிக் பிராந்தியம் முழுவதும் பரவுவதற்கு ஆசிய நாட்டவர்களே காரணமென சுகாதார அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்நோய் பிரிட்டிஷ் கொலம்பியாவில் கடந்த ஆண்டு மட்டும் 830 பேருக்கு பீடிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது (1980 இல்- 14 பேருக்கு மட்டுமே இந்நோய் இருந்தது )

நாட்டுக்குள் பிரவேசிப்பவர்களின் நடைமுறைகள் ஊசி மருந்தேற்றல், வாழ்க்கை முறை மாற்றங்கள் இந்நோய் பரவக் காரணமெனக் கூறப்படுகிறது.

இந்நோயைத் தடுப்பதற்கு பிரிட்டிஷ் கொலம்பியா ஆகிய நாடுகளில் உள்ள அனைத்து பாடசாலைச் சிறுவர்களுக்கும் தடுப்பூசி ஏற்ற சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அசர்பைஜான் தலைநகர்

## மக்கள் முன்னணி வசம் அதிபர் தப்பியோட்டம்

(பாக்கோ)

அசர்பைஜானில் அதிபர் ஆசாத் முஜைபையோ விபா மூன்று பிறப்பித்த நெருக்கடி நிலைச் சட்டத்தை மீறிய எதிர்த்தரப்பு மக்கள் முன்னணி, நேற்று முன்தினம் பாராளுமன்றம், தொலைக்காட்சி நிலையம் மற்றும் தலைநகர் பாக்கோவிலுள்ள அதிபர் மாளிகை என்பவற்றின் கட்டுப்பாட்டையும் தம் வசம் எடுத்துக் கொண்டுவிட்டது.

ஜனநாயக சமூகம் ஒன்றை அமைப்பதே தமது நோக்கம் என்று அம் முன்னணியினர் பின்னர் தொலைக்காட்சி அறிவிப்பு ஒன்றில் தெரிவித்தனர். அவ் அறிவித்தலில் மேலும் எல்லா அரசியல் கட்சிகளுடனும் ஒத்துழைக்க முன்னணி விரும்புவதாகவும் கூறப்

இந்த முன்னணி அதிபர் மாளிகைக்குள் திடீரென நுழைந்தபோது அங்கு அதிபர் காணப்படவில்லை அவர் எங்கிருக்கிறார் என்பதும் இது வரை அறிவிக்கப்படவில்லை. இச்சம்பவத்தின் போது ஒருவர் கொல்லப்பட்டதுடன் மூவர் காயமடைந்தனர்.

பொலிஸ் நிலையத்தில்

## துப்பாக்கியால் தன்னையே சுட்டுத் தற்கொலை

(டென்)

துப்பாக்கி ஒன்றுடன் பொலிஸ் நிலையமொன்றுக்குள் நுழைந்த மூன்று குழந்தைகளின் தாயொருவர் தன்னைத்தானே சுட்டுக்கொண்டு

மேற்படி சம்பவம் டென்வருக்குச் சமீபமாகவுள்ள பெடரல்றைற்ஸ் பொலிஸ் நிலையத்தில் நடந்துள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, தன்னைச்

## கூட்டுச்சேரா அமைப்பின் தத்துவத்தில் மாற்றமில்லை

(பாலி)

மெய்யான சமத்துவம், உண்மையான சுதந்திரம், மற்றும் தடையற்ற வளர்ச்சி என்ற அணிசேரா நாடுகளின் இலட்சியத்தை நிறைவேற்ற நெருங்கிய ஒத்துழைப்பும், ஒற்றுமையும் வேண்டுமென இந்தோனேசியாவில் நடைபெற்று முடிந்த வெளியுறவு அமைச்சர்களின் கூட்டத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த இயக்கத்தின் அடிப்படைத் தத்துவத்தில் எந்த விதமாறுதலும் இல்லை என்று இரண்டு நாள் மாநாட்டின் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## மனித உரிமைகள் பற்றி அணிசேராஇயக்கத்தினுள் முரண்பாடு

மனித உரிமை விவகாரம் தொடர்பாக அபிவிருத்தி அடைந்த நாடுகளும், அபிவிருத்திஅடைந்துவரும் நாடுகளும் முரண்பாடான கருத்துக்களைக் கொண்டிருப்பதால் மனிதஉரிமை விவகாரம் அணிசேரா இயக்கத்தின் முக்கிய கவனத்தை ஈர்த்திருக்கிறது. அண்மையில் லொஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்ற சம்பவம் தனது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு மட்டும் இதனை சிறைப்படுத்தி விட முடியாது என்பதை காட்டுகிறது.

இவ்வாறு வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் இந்தோனேஷியாவில் ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனத்துக்கு கருத்து தெரிவித்துள்ளார்.

மேலும் உதவி வழங்கும்அபிவிருத்தி அடைந்த நாடுகள் உதவிபெறும் நாடுகளுக்கு உதவி வழங்குவதில் மனிதஉரிமைப் பிரச்சினையை கிளப்புவது மூன்றாம் உலக நாடுகளில் கவலை அளிக்கும் விவகாரமாகவே உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## பர்மாவிற்குதிரும்பிச்செல்ல முஸ்லிம் அகதிகள் மறுப்பு

(டாக்கா)

பர்மா முஸ்லிம் அகதிகளை மீண்டும் பர்மாவுக்குத் திருப்பி அனுப்புவதென பங்களாதேஷ் பர்மா அதிகாரிகளுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் பின்னர் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

திருப்பியனுப்புகிறோமென பெயர்ப்பட்டியலையும் பர்மா அதிகாரிகளிடம் கையளித்துவிட்டோமென பங்களாதேஷ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஆறுமாத காலத்திற்குள்

றில் இராணுவம் நிலை கொண்டுள்ளது. அதேவேளை பௌத்த விகாரைகளையும், சிங்களக் குடியிருப்புக்களையும் நிறுவுவதிலும் தீவிர அக்கறை காட்டப்படுகின்றது.

இவ்வாறாக தமிழரைத் தென் தமிழீழத்தில் மரணத்தின் விளிம்பிற்குத் தள்ளியுள்ள சிறிலங்கா அரசாங்கத்தின் இன விரோத, இன அழிப்பு நடவடிக்கைகளில் தமிழ்க் குழுக்களின் பங்கும் கணிசமானதாகும். விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற ரீதியில் சிங்களப் பேரினவாதம் எவ்வாறு தமிழருக்கு எதிரான போராக நடத்தி வருகின்றதோ அதேபோன்று தமிழ்க்குழுக்களும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்பதைத் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கையாகவே நடத்தி வருகின்றன.

இந்நிலையில் பல்வேறு முனைகளில் இருந்தும் எவ்வேளையிலும் ஆபத்துக்கள் நெருங்கலாம் என்ற நிலையிலும் சக மாணவருக்காகப் போராட்டம் நடத்த துணிந்த மாணவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். சிறிலங்கா இராணுவம் எந்த வகையான காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கையிலும் ஈடுபடலாம் என்ற நிலையிலும் மேற்கொள்ளப்பட்ட இம்மாணவர்களின் போராட்டத்திற்கு ஒத்துழைப்பும், ஊக்கமும் அளிப்பது ஏனையோராது கடமையும் ஆகும்.

இதேவேளை, தமிழருக்கு எதிரான எவ்வகையான அடக்குமுறை, இனஅழிப்பு நடவடிக்கைகளை சிங்கள பேரினவாத அரசாங்கம் மேற்கொண்டாலும் அது எதிர்க்கப்படும் என்பதற்கும், தமிழீழ தேசிய இனம் தனது இறுதி மூச்சு இருக்கும் வரை தனது உரிமைக்காகப் போராடும் என்பதற்கும் இது ஓர் எடுத்துக் காட்டாகும். இதனைச் சிறிலங்கா அரசாங்கம் புரிந்து கொள்ளுதல் நல்லது.

## ஈரான் வெளி. அமைச்சர் புதுடில்லி விஜயம் செய்கிறார்

[டில்லி]

ஈரானில் வெளியுறவு அமைச்சர் அலி அக்பர் வெலாயர்தி இரண்டு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு வரும் திங்களன்று புதுடில்லி வரவுள்ளார் இது முன்னரே திட்டமிட்ட விஜயமல்ல என்றபோதும் அசர்பைஜான் நிகழ்ச்சிகள், முன்னாள் சோவியத்தின் மத்திய ஆசிய குடியரசுகளில் தோன்றியுள்ள அரசியல் நிலை, இரு தரப்பு பொருளாதார உறவுகள் என்பன போன்றவற்றினால் ஈரானிய அமைச்சர் இத் திடீர் விஜயத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

சிகளுடனும் ஒத்துழைக்க முன்னணி விரும்புவதாகவும் கூறப்பட்டுள்ளது.

## விண்கலத்தை வழிமறித்த அமெரிக்க விண்வெளிவீரர்

விண்வெளியில் வலம் வந்து கொண்டிருக்கும் விண்கலத்தை விண்வெளியில் நடக்கும் மூன்று அமெரிக்க கவிபர்கள் தங்கள் கைகளினால் பிடித்து அது பழுது பார்ப்பதற்காக விண்வீரர் பயணம் செய்யும் என்டிவர் செய்மதிக்குள் போடப்பட உள்ளது.

ஹாவாய்க்கு மேலே 230 மைல் உயரத்தில் என்டிவர் சென்று கொண்டிருந்த போதே அவர்களால் பிடித்தனர்.

பிடிபட்ட செய்தி பூமிக்கு அறிவிக்கப்பட்டபின் செய்மதி கட்டுப்பாட்டு நிலையை அதிகாரிகளிடையே மகிழ்ச்சி ஏற்பட்டது.

இவ் விண்வெளி வீரர்கள் தாங்கள் பிடித்த தகவல் சாதன விண்கலத்தில் வந்து ரொக்கெட் ஒன்றைப் பொருத்தி அதை 22,500மைல் சுற்றுப்பாதையில் செல்ல வழி செய்வார்கள்.

விண்வெளிவீரர்கள் 13 கோடியே 10 லட்சம் டாலர் செலவிலான மேற்கண்ட விண்கலத்தை அடைவதில் இருமுறை தோல்வியுற்ற பின் மூன்றாவது முயற்சியில் வெற்றி பெற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

என்டிவர் தகவல் விண்கலம் இரண்டும் மணிக்கு 17500 மைல் வேகத்தில் சென்று கொண்டிருக்கின்றது.

...மூன்று குழந்தைகளின் தாயொருவர் தன்னைத்தானே சுட்டுக்கொண்டு இறந்துள்ளார்.

...யத்தில் நடந்துள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, தன்னைச் சுடும்படி கூறிக்கொண்டு உள்ளே நுழைந்த இப்பெண்ணைப் பொலிஸார் ஆறுதல் படுத்த முன்னரே துப்பாக்கியின் விசையை அழுத்தி விட்டதாகக் கூறப்படுகிறது.

டமிடெய்லர்(29) என்ற மேற்படி பெண் பின்னர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உயிர்துறந்தார்

இவர் ஒரு பொலிஸ் அதிகாரியை நேக்கிச் சுட்டதாகவும் குறி தவறியதை அடுத்தே தன்னைத்தானே சுட்டுக்கொண்டதாகப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தோர் தகவல் தெரிவித்தனர்.

### வெளிநாட்டமைச்சர்கள் மாநாட்டில்

## பாகிஸ்தான் மீது இந்தியா பகிரங்கக் கண்டனம்

ஜம்மு - காஸ்மீரில் இந்தியாவுக்குத் தோன்றியுள்ள சட்டம் ஒழுங்குப் பிரச்சினைக்குப் பயங்கரவாதிகளையும், பிரிவினை வாதிகளையும் பாகிஸ்தான்பகிரங்கமாக் ஆதரிப்பதே பிரதான காரணம் என்று இந்திய வெளியுறவு இணை அமைச்சர் எட்வேர்ட் பெலாய்ரோ தெரிவித்தார்.

இந்தோனிசியா பாலியில் அணிசேரா நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் பேசும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜம்மு - காஸ்மீரில் மனித உரிமைகள் மீறப்படுவதாகச் சொல்லப்படுவது குறித்து பாகிஸ்தான் வெளியுறவு இணை அமைச்சர் முகமெட் வெளியிட்ட கருத்துக்களை பெலாய்ரோகுறிப்பிட்டு, மாநிலத்தில் பயங்கர வாதத்திற்கும், பிரிவினை வாதத்திற்கும் உதவி செய்து கொண்டும் உடந்தையாக இருந்து கொண்டும் பாகிஸ்தான் மனித உரிமைகளுக்காக வாதிடுவதாகப் பாசாங்கு செய்கின்றது என்றார் பெலாய்ரோ.

ஜம்மு - காஸ்மீர் பிரச்சினையை எழுப்பியதன் மூலம் பாகிஸ்தான் இருதரப்பு பிரச்சினைகளை எழுப்புவதில்லை என்ற அணிசேரா நாடுகள் அமைப்பின் மரபை மீறிவிட்டது என்றும் பெலாய்ரோ கவலை தெரிவித்தார்.

## பொஸ்னியா-கர்ச்சோவியா ஐ.நா சபையில் விவாதம்

(நியூயோர்க்)

பொஸ்னியா - கர்ச்சோவில் மோசமடைந்து வரும் நெருக்கடியை ஐக்கிய நாடுகள் பந்தோபஸ்து சபை விவாதித்து வருகிறது போரிடும் குழுக்களை சண்டையை நிறுத்தி துருப்புகளை விலக்கிக் கொள்ளுமாறும் முறையற்ற படைகளைக் கலைக்கும் படியும் ஐ நா. பந்தோபஸ்து சபை கேட்டுக்கொண்டுள்ளதுசெர்பி இனத்தவர்களின் ஆதிக்கமுடைய பெடரல் இராணுவத்தைக் கலைத்து குரோஷியாவில் இயங்கும் ஐ நா. அமைதிப்படையை ஈடுபடுத்த வேண்டுமென்று சபை இயற்றிய தீர்மானமொன்றில் கோரப்பட்டுள்ளது.

சண்டையில் சிக்கியிருக்கும் குடியரசுகளுக்கு மனிதாபிமான உதவி கிடைக்கச் செய்யவும், தலைநகர் சாரயோவியில் உள்ள விமான நிலையத்துடன் பத்திரமாக தொடர்புகொள்ள வழிசெய்யுமாறும் இத்தீர்மானத்தில் பொதுச் செயலாளர் பூட்டர்ஸ்காலிக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

பர்மா அதிகாரிகளுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் பின்னர் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் பர்மா செல்ல முடியாதென பங்களாதேஷ் வந்தடைந்துள்ள முஸ்லிம் அகதிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பர்மா முஸ்லிம்கள் தாயகம் அனுப்புவதற்கு ஆன ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுமென பங்களாதேஷ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பர்மா இராணுவத்தினர் வீடுகளுக்கு தீமூட்டினர்; கற்பழித்தனர்; கொள்ளையடித்தனர் எதிர்த்தவர்களை கொன்றனர் என்று சித்திரவதைகளில் இருந்து தப்பியோடி வந்த முஸ்லிம் அகதிகள் தெரிவித்தனர். இதனால் இவ் அகதிகள் மீண்டும் அங்கு செல்ல முடியாது என எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

5000 பேர்களை முதலில் ... பங்களாதேஷ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஆறுமாத காலத்திற்குள் அனைத்து அகதிகளையும் பர்மாவுக்கு திருப்பி அனுப்பும் பங்களாதேஷ் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக ஆயிரக்கணக்கான பர்மா முஸ்லிம் அகதிகள் முகாம்களை விட்டுவெளியேறி எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதேவேளை தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்த பின்னரே அவர்களைத்திருப்பி அனுப்ப வேண்டுமென பிரிட்டிஷ் அகதிகள் சபை ஆசியக் குழுவினர் தலைவர் டேவிட் எனனெல்ஸ் பிரபு தெரிவித்துள்ளார் அத்துடன் ஐ.நா. உபபொதுச்செயலர் ஜேன் எலியசன் முதலில் பர்மாவுக்கு சென்று அகதிகள் நாடு திரும்பியதும்கிடைக்கவுள்ள பாதுகாப்பு பற்றி அறிந்துகொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## புதிய விசாரணை நடத்த அரசவழக்கறிஞர் கோருவர்

(வாசிங்டன்)

கறுப்பின மோட்டார்சாரதி ரொட்னிகிங்கை தாக்கிய வழக்கில் விடுதலை செய்யப்பட்ட நான்கு வெள்ளையர்களில் ஒருவர் மீது புதிய விசாரணையை நடாத்தும்படிலொஸ் ஏஞ்சல்ஸ் அரசாங்க வழக்கறிஞர்கள் கோரவுள்ளனர்.

லாரன்ஸ் பவல் என்ற வெள்ளையின பொலிஸ் அதிகாரிகிவ்மீது அளவுக்கதிகமானபலாத்காரத்தை பிரயோகித்தற்காக அவரை ஒய்வு பெறச் செய்ய வேண்டும் என அரச வழக்கறிஞர்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கோரஇருப்பதாக மாவட்ட அட்டோர்னி ஐராரெய்னர் தெரிவித்தார்.

இவ்வழக்கு வெள்ளையர்கள் அதிகமுள்ள லொஸ் ஏஞ்சல்ஸ் போன்ற நகரப்பகுதியிலேயே நடாத்தப்படவேண்டும் என கோரப்போவதாயும் ரெய்னர் தெரிவித்தார்.

இந்த நான்கு வெள்ளையரும் விடுதலை செய்யப்பட்டதை அடுத்து லொஸ் ஏஞ்சல்ஸில் மூன்று நாட்கள் கலகம் ஏற்பட்டது என்பது தெரிந்ததே.

பவல் மீது மீண்டும் வழக்கு நடாத்துவது ஆறிய காயங்களை மீண்டும் கிளறுவது போலவே இருக்கு என பலர் கூறிய போதிலும் ரொட்னிகிவ் விடயத்தில் நீதி வழங்கப்படவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

அதேசமயம் வெள்ளையின சாரதி ஒருவரை தாக்கிய குற்றத்திற்காக மூன்று கறுப்பர்கள் கைதுசெய்யப்பட்டுஆயுள் தண்டனையை எதிர்நோக்கி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது நாலாவது சந்தேக நபர் ஒருவரும் சரணாகதி அடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஈழநாதம்

# உலகில் ஒரேவல்லரசின் ஆதிக்கம் அணிசேரா நாடுகள் கவலை

(பாலி)

உலகில் ஒரேவல்லரசின் ஆதிக்க நிலை உருவாகி வருவது குறித்து அணிசேரா நாடுகளின் வெளியுறவுச் செயலாளர் மாநாட்டுப் பிரகடனம் கவலை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் உலகம் சமூகிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அணிசேரா இயக்கம் மேலும் அதிகளவில் பணியாற்ற வேண்டுமென்று இப் பிரகடனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரே வல்லரசு ஆதிக்கம் செலுத்தக் கூடிய நிலை உருவாகுமானால் இப் பொழுது உள்ள உலகப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கான வாய்ப்புகள் குறையும் என கருத்துத் தெரிவிக்கப்பட்டது. புதிய உலக ஒழுங்கிற்கு ஏற்ப அணிசேரா இயக்கம் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டியதில்லை எனவும் முடிவு செய்யப்பட்டது.

இந்தோனேசிய தலைநகர் பாலியில் நடைபெற்ற இம் மாநாடு நேற்றுடன் முடிவடைந்தது.

இம் மாநாட்டில், அணிசேரா இயக்கத்தில் குரோசியா, சிலோவேனியா என்பவற்றின் நிலைமை என்பது நிகழ்ச்சி நிரலில் முக்கிய இடத்தை வகித்தது.

இதேவேளை அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஜகார்ட்டாவில் நடைபெறுமென்று தெரிவிக்கப்படுகிறது.

## வயோதிபர் தற்கொலை

குடும்பத்தகராறு காரணமாக வயோதிபர் ஒருவர் கிருமிநாசினியருந்தித் தற்கொலை செய்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் வரணிப்பகுதியில் நிகழ்ந்துள்ளது.

# தீவுப்பகுதி மாணவர்களுக்கு வசதி செய்துதர கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தீவகப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து தனியார் கல்வி நிறுவன கட்டிடங்களில் தற்காலிகமாக கல்வி கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை உடனடியாக நிறைவேற்றித்தர நடவடிக்கை எடுக்குமாறு கோரி யாழ் அரசாங்க அதிபருக்கு தீவகக் கல்விப் பகுதியினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தீவகக் கல்விப் பகுதியினர் சார்பாக கடந்த பதின்மூன்றாம் திகதி வேலணை பிரதிக் கல்விப் பணிப்பாளர் கையொப்பமிட்டு அரச அதிபருக்கு சமர்ப்பித்த மேற்படி மகஜரில்:

1. தற்போதைய அவசிய தேவை கருதி ஆளணியினரின் சுய விபரக்கோவைகளைத் தயாரிப்பதற்குத் தேவையான பிறப்புச் சான்றிதழ்கள், திருமணப் பதிவுச் சான்றிதழ் பிரதிகளை முன்னுரிமை அடிப்படையில் துரிதமாக வழங்கல்.
2. இடம்பெயர்ந்த மாணவர்கள் கற்கும் பாடசாலைகளிலும் தனியார் கல்வி நிலையங்களிலும் தளபாடப்பற்றாக்குறை காணப்படுகிறன. புனர்வாழ்வுப் பகுதிமூலம் அல்லது வரவு செலவுத்திட்ட நிதி மூலம் இத்தளபாடப் பற்றாக்குறையை நீக்க உதவுதல்,
3. தீவகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் பலர் இங்கு குடும்பத்துடன் இணைவதற்கு இங்கே வர விரும்புகிறார்கள். இவர்களுக்குப் பதிலாக அண்மையில் அங்கு சென்று 12 ஆசிரியர்களைப் பயன்படுத்திக் கொண்டு இங்கு வர விரும்புவோரை அழைத்து வரல்,
4. தனியார் கல்வி நிறுவனங்களில் கற்கும் மாணவர்களுக்குத் தற்காலிக சலகூட வசதிகள் செய்து தரல், இவை நான்கு தொகுதிகள் தேவை.
5. கரும்பலகைக்கு வேண்டிய மை 10 லீற்றர் கொழும்பிலிருந்து கொண்டுவர உத்தரவு பெறல், ஆகிய கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

# புலிகள் மீது தேவையற்ற தடை; அவசரப்பட்டு எடுத்த முடிவு

--ராமதாஸ்

[சென்னை]

விடுதலைப் புலிகள் மீது தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை அவசரப்பட்டு எடுத்த முடிவு என்றும் தேவையற்ற ஒரு செயல் என்றும் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் எம். ராம்தாஸ் விடுத்த அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக மத்திய அரசு தடை விதித்தால் அத்தடைக்கு எதிராக தமது கட்சி போராடும் எனவும், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகத் தனது கட்சி என்றும் இருக்கும் என்று டாக்டர் ராம்தாஸ் குறிப்பிட்டிருந்தமை தெரிந்ததே.

தமிழகத்திலுள்ள சில முக்கிய புள்ளிகளின் ஆதரவுடன் தான் புலிகள் இங்கே செயற்படுகின்றனர். எனவே புலிகளைத் தடைசெய்தால் மட்டும் போதாது. இந்தப் பிரமுகர்களையும் பிடித்து உள்ளே தள்ளவேண்டும் என்று இந்திய ராஜ்யசபா எம்.பியும் ஜனதாக் கட்சித் தலைவர்களில் ஒருவருமான டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி கூறியுள்ளார்.

# நஞ்சருந்திய இருவரில் கணவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் வடக்கில் குடும்பப் பிரச்சினை காரணமாக கணவன் மனைவி ஆகிய இருவரும் நஞ்சு அருந்தியதன் காரணமாக கணவன் இறந்தார் மனைவி ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை ஆறு மணியளவில் கோண்டாவில் வடக்கில் இச்சம்பவம் நடைபெற்றது. பரமானந்தசிவம் (44 வயது) பரமானந்தசிவம் ரதிலீலா (29 வயது) ஆகிய இருவரும் யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டனர். பின்னர் கணவன் மரணமடைந்தார் இவரது மனைவி அவசர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் (பா)

# வேலை தருவதாக அழைத்துச்சென்ற முகவர்கள் தலைமறைவு வெளிநாட்டில் பலர் அவதி

(கொழும்பு)

இருநூறுக்கும் அதிகமான இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களால் கைவிடப்பட்ட நிலையில் மலேசியா, சிங்கப்பூர், தைவான், ஹொங் ஹொங் ஆகிய நாடுகளில் அனாதரவாக நிற்பதாக தெரிவிக்கப்படுகிறது. இத்தகவலை இன்டர்போல் சிறிலங்காப் பிரிவு தெரிவித்தது.

வெளிநாடுகளில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி கூட்டிச் சென்ற முகவர்களின் உதவியாளர்கள் இடைநடுவில் இவர்களைக் கைவிட்டு மாயமாக மறைந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கண்டெடுக்கப் பட்டது

மே நாள் அன்று யாழ். பல்கலைக்கழகத்திற்கு அருகில் கண்டெடுக்கப்பட்ட மிதி வண்டி ஒன்று அரசியல் பிரிவு, யாழ் மாவட்டச் செயலகம் கோண்டாவிலில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரிமையாளர் தகுந்த அடையாளத்தை நிரூபித்து அதனைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

## போதனா

காத்துக்கிடக்கின்றனர்.

கொட்டும் மழையிலும் குளிரிலும், நுளம்புத் தொல்லையிலும் இந்தநோயாளர் நடைபாதை வழியே கியூவில் படுத்துத் தூங்குவதை திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் நேரில் காணக்கூடியதாகவுள்ளது

கண்ணில் ஏற்படும் நோய்களுக்கு உடனுக்குடன் அவசர சிகிச்சை பெறவேண்டிய நிலையிருந்தும் பலர் இவ்வாறு வந்து பலமணி நேரம் தங்கியிருந்தும் துண்டு கிடைக்காததினால் திரும்பிச் செல்லும் துர்ப்பாக்கிய நிலையும் அங்கு தொடர்ந்து நிலவுகிறது.

இரவிரவாக சிகிச்சை பெற

## கும்பாபிஷேக தினம்

யாழ். பல்கலைக்கழக, அருள்மிகு பார்வதி அம்பாள் சமேத ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய மகா கும்பாபிஷேகதின விழா இம் மாதம் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிறப்புற நடைபெற உள்ளது.

## இன்றைய உதைபந்தாட்டப் போட்டி

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் பதினொருபேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில், பிரிவு ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஆறு கழகங்களுக்கிடையிலான லீக் முறையிலான இரண்டாவது சுற்றுப் போட்டியில் இன்று பாசையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து

## இதய அஞ்சலி மதிவாணன்

யாழ். சித்திவினாயகர் மகா வித்தியாலய மாணவனும் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினருமான மதி

## ஜெயலலிதாவிற்கு முதலில்

# வணக்கம் செலுத்தாததால் கூட்டத்தில் சலசலப்பு

[சென்னை]

கோயம்புத்தூரில் நவீன விமான நிலைய முனையத்தை திறந்துவைத்த பின்னர் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் குப்புசாமி பேச ஆரம்பித்ததும் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

மத்திய அமைச்சர் மாதவ்ராவ்சிந்தியா அவர் ளே என்று முதலில் குறிப்பிட்டதை தொடர்ந்தே இச் சலசலப்பு ஏற்பட்டது. இக் கூட்ட மேடையில் முதலமைச்சர் ஜெயலலிதாவும் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## விபத்தில் ஐவர் பலி

மகாராஷ்ரா மாநிலத்தின் சாச்பூருக்கு அருகேயுள்ள ஆயுதத் தளபாடத் தொழிற்சாலைக்கு ஊழியர்களை ஏற்றிச் சென்ற அரச போக்குவரத்துத்துறை பஸ்வண்டியொன்றும் லாரியொன்றும் மோதிக்கொண்டதால் ஐவர் கொல்லப்பட்டதுடன் முப்பது பேருக்கு அதிகமானோர் காயமடைந்தனர்.

# தி.மு.க. நிலைப்பாடு என்ன? வாழப்பாடி கேட்கிறார்

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்திய அரசு தடைசெய்திருப்பதை திராவிட முன்னேற்றக் கழகமும் அதன் தலைவர் மு. கருணாநிதியும் ஆதரிக்கிறார்களா இல்லையா? என்பதை தெளிவாக கூறவேண்டும் எனவாழப்பாடி இராமமூர்த்தி வெளியிட்ட அறிகையொன்றில் கோரியுள்ளார்.

முன்னதாக மத்திய அரசு எடுக்கும் இந்த நடவடிக்கையை தமதுகட்சி தடுக்கவியலாது என்று தி மு க. மாநிலங்களவை உறுப்பினர் முரசொலிமாறனும், விடுதலைப் புலிகளைத் தடை செய்ய மத்திய அரசு அளித்துள்ள அங்கீகாரம் பிற அரசியல் கட்சிகளின் மீது பழிவாங்குவதற்கே பயன்படும் என்று மு. கருணாநிதியும் தனித்தனி அறிக்கைகளில் குறிப்பிட்டிருந்தது தெரிந்ததே.

திரு. கருணாநிதி தனது அறிக்கையில் விடுதலைப் புலிகளைத் தடை செய்துவிட்டு இலங்கைத் தமிழர் பிரச்சனையை இந்தியா எவ்விதம் கையாளப்போகிறது என்றும் வினவியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# காவிரி நீர் பிரச்சினையில் டில்லி தலையிட வேண்டும்

## தமிழகவிவசாயிகள் சங்கம் தீர்மானம்

காவிரி நீர் பிரச்சினையில் மத்திய அரசு உடனடியாகத் தலையிட்டு நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை வேண்டுமெனவும் தமிழக விவசாயிகள் சங்கம் நிறைவேற்றிய தீர்மானம் ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

# டில்லியில் கலவரம் ஊரடங்கு உத்தரவு அமுல்

டில்லியில் கலவரம் பரவியுள்ளதையடுத்து நகரின் சில பது பேர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும்

தலையீட்டு நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை அடுத்த மாதம் பன்னிரண்டாம் திகதிக்கு முன்பாக அமுல்படுத்த வேண்டுமெனவும், குறுவை சாகுபடிக்கு தண்ணீர் கிடைக்கச் செய்ய நிய தீர்மானம் ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் பட்டுக்கோட்டையில் நடைபெற்ற இச்சங்கத்தின் பொதுக்கூட்டத்தின்போது இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# அணு ஆயுத உற்பத்தியில் இந்தியா இறங்க வேண்டும்

(டில்லி)

தற்பாதுகாப்புத் தேவைகளைக் கருத்தில் கொண்டு இந்தியா அணு ஆயுத தயாரிப்பில் இறங்க வேண்டும் என்று பாரதீய ஜனதக் கட்சியின் தலைவர் டாக்டர் முரளி மனோகர் ஜோஷி இந்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## வீரவணக்கம்

### 45ஆம் நாள் நினைவஞ்சலி

வீர ஜனனம் 23 — 03 — 1969



வீர மரணம் 04 — 04 — 1992

### கப்டன் கண்ணன்

[04. 04. 1992 அன்று கட்டுவன் காவலரண் தகர்ப்பில் வீரச்சாவைதழுவிக்கொண்டார்]

இவன்!

விளக்கைத் தேடிய விட்டில் அல்ல
விடியலைத்தேடிய வீர மறவன்

(2579) - சக போராளிகள்

யுள்ளதையடுத்து நகரின் சில பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இரண்டு சமூகத்தவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலையடுத்து இது அமுலுக்கு வந்துள்ளது இக் கலவரங்களில் மூவர் உயிரிழந்ததாகவும் ஐம்பத்தைந்துக்கும் அதிகமானோர் காயம் அடைந்ததாகவும் பொலிஸ் வட்டாரங்கள் கூறியுள்ளன. சுமார் ஐம்

## வடகிழக்கு

வீடு செய்யவேண்டியுள்ளது

இதேவேளை இலங்கை போன்ற யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் அகதிகளைப் பராமரிக்கவென முன்னர் பெரியளவில் நிதி ஒதுக்கீடு செய்த உலகிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் தற்பொழுது அதற்கு பின் நிற்கின்றன. யுத்தத்தினால் ஏற்படும் அகதிகள் பிரச்சினையை யுத்தத்தைத்தொடர்ந்துநடத்தும் அரசுகளே கவனிக்கவேண்டும் எனவும் அவை தெரிவித்துள்ளன.

இயற்கை அழிவுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கே இனி அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவி வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது அரசசார்பற்ற நிறுவனங்களின் இம் முடிவும் முன்னரே பெரிதாகப் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தை மேலும் சீர்கேடு அடைய வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வானில்

செ. உஷாதேவி (வயது 35) என்பவரே இச் சம்பவத்தில் பலியானவராவர். வானில் இருந்து இறங்கியபோது தவறுதலாக சில்லின்கீழ் சிக்குண்டதனாலேயே இம் மரணம் சம்பவித்துள்ளதாகத் தெரிய வருகிறது. [35]

செய்யப்பட்டுள்ளதாகவும் நிலைமை தற்போது சுமூகமடைந்திருப்பதாகவும் தெரிய வருகின்றது.

## சீனா விஜயம்

இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் ஆறு நாள் பயணமொன்றை மேற்கொண்டு இன்று சீனா செல்கிறார் இந்திய ஜனாதிபதி ஒருவர் சீனாவிற்கு பயணம் செய்வது இதுவே முதற் தடவையாகும.

## ஈக்கள்

ஆறுமணியானதும் இலையான்கள் ஒய நுளம்புகள் தொல்லை கொடுக்கத் தொடங்குகின்றன. இதனால்நோயாளர்கள் தமது நோயின் வேதனையையும் பொருட்படுத்தாது கண்விழித்து நுளம்புகளை விரட்ட வேண்டிய நிலையில் உள்ளனர்.

இத் தொல்லைகளால் நோயாளர்களுக்கு நோய்கள் குறைவதற்குப்பதிலாக அதிகரிக்கக்கூடிய சாத்தியக் கூறுகளே கூடுதலாகக் காணப்படுவதுடன் வேறு நோய்களும் தொற்றுவதற்கு வாய்ப்பாகிறது.

இதேவேளை போதனா வைத்திய சாலையின் உட்பகுதியில் பத்திற்கு மேற்பட்ட கட்டாக்காலி நாய்களும் காணப்படுகின்றன. இவை தினமும் நோயாளர் உண்ணும் உணவின் மிகுதியை உண்பதற்காக குப்பைத் தொட்டிகளின் அருகே உணவு வேளைகளில் காத்திருக்கின்றன. இவை உணவு உண்ணும் போது தமக்குள்ளேயே கடிபட்டு சண்டையிட்டுக் கொள்வதாகவும் இவையும் நோயாளருக்கு பெரும் சிரமத்தைக் கொடுப்பதாகவும் நோயாளர்கள் பலர் புகாரிட்டுள்ளனர். (ச)

இரவிரவாக சிகிச்சை பெற காத்திருக்கும் நோயாளர்களில் சிறுவர், சிறுமியர் வயோதிபர் உட்பட அனைத்து பிரிவினரும் அடங்குகின்றனர்.

இவ்வாறு இவர்கள் வந்து பல மணி நேரம் தங்கி கியூவில் இருந்தாலும் கடமையாற்றும் சிற்றூழியர்களின் தொல்லைகளுக்கும் இவர்கள் ஆளாகவேண்டிய நிலை யுருவாகியுள்ளது. இரவு நேரக் கடமையில் ஈடுபடும் இச்சிற்றூழியர்கள்அங்கு கியூவில் தங்கியிருக்கும்நோயாளர்களிடம் சென்று ''உமக்குப் பின்னால் நான் நிற்கிறேன் அடுத்து வருபவரிடம் கூறும்'' எனக் கூறிவிட்டுச் செல்வதாகவும் பின்னர் காலை ஆறு மணிக்கு இலக்கத்துண்டு கொடுக்கும் போது வந்து நான் நின்றுவிட்டு இவரிடம் சொல்லிவிட்டுத்தான் போனேன் எனக்கூறி தாமும் புகுந்து கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் மிக நீண்ட தூரத்திலிருந்து வந்து பலமணி நேரமாக தங்கியிருந்தும் பல நோயாளர் சிகிச்சை பெறாது திரும்பிச் செல்லவேண்டியுள்ளதாக நோயாளி ஒருவர் நமது நிருபரிடம் வேதனையுடன் கூறினார்.

பணவசதியுடைய நோயாளர் வைத்திய நிபுணர்களுடன் தனியார் வைத்தியசாலைகளில் பணத்தைச் செலுத்தி தனிப்பட்ட முறையில் தொடர்பு கொண்டால் அவர்கள் போதனா வைத்திய சாலைக்குள் வைத்தியரின் விசேட துண்டுடன் சிகிச்சை பெறும் வசதிகள் தொடர்வதாக கூறிய ஒரு நோயாளி தாம் பணம் இல்லாததினாலேயே இவ்வாறு சீரழியவேண்டிய நிலையுள்ளது எனக் குறிப்பிட்டார். (ச)

இயக்க உறுப்பினருமான மதிவாணன் கடந்த வியாழனன்று விபத்தில் அகாலமரணமானார்.

பாடசாலைப் பணிகளில் இவர் ஈடுபட்டிருந்தபோது இந்த விபத்து ஏற்பட்டது. இவருக்கு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினர் தமது இதய அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## தேசிய

1991 வருடாந்த அறிக்கைப்படி இந்த வங்கி ரூபா 379 மில்லியன் இலாபமீட்டியுள்ளது இது ஏனைய வங்கிகள் ஈட்டியஇலாபத்தைவிட அதிகமானதாகும்.

திறைசேரிச்செயலாளர் ஆர் பாஸ்கரலிங்கம், மத்தியவங்கி பிரதிநிதிஆளுநர்கலாநிதி எஸ். ரி ஜி. பெர்னான்டோ, இலங்கை வங்கி பொது முகாமையாளர் ஆர். எல். நாணயக்காரா, மக்கள் வங்கிப் பொது முகாமையாளர் நிஹால் ஜெயவர்த்தனா, பொதுத் திறைசேரி மேலதிகப் பிரதிச் செயலாளர் கே. சண்முகலிங்கம் ஆகியோரே இராஜினாமாச் செய்த உறுப்பினர்கள்

குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. இன்று பி. பகல் 3. 30 மணிக்கு யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இப் போட்டி நடைபெறவுள்ளது.

★ ★ ★

[யாழ்ப்பாணம்]

திருமலை நட்சத்திர முதலாம் ஆண்டு நிறைவை ஒட்டி நடைபெறும் ஏழுபேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டித் தொடரில் இன்றைய தினம் மாலை 3. 30 ற்கு தோப்புக்காடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கணேசன் விளையாட்டுக்கழகமும் 4. 30 ற்கு பல்கலைக்கழக அணியை எதிர்த்து கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. கடந்த பதினோராம் திகதி யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமான இவ் உதைபந்தாட்டப் போட்டி எதிர் வரும் 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

## நினைவூட்டுகிறோம்

மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பெறப்பட்ட நிரந்தர போக்கு வரத்து அனுமதி அட்டைகள்யாவும் இம்மாதம் 31 ஆம திகதி வரையுமே செல்லுபடியாகும். மேலதிக விபரங்களுக்கு அருகில் உள்ள போக்கு வரத்து அனுமதி வழங்கும் காரியாலயத்தை நாடவும். [சி-4421]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1992ஆம் ஆண்டு மேமாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.